| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| | **சாதாரணக் கூட்டம்** | | |
| | 2022ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08.04.2022ம் தேதி வெள்ளிக்கிழமை பகல் 12.05 மணிக்கு நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம் நகர்மன்ற கூட்ட அரங்கில் நகர்மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. | | |
| | T.N.Muruga<br>நகர்மன்ற தலைவர்<br>திருக்கோவிலூர் நகராட்சி. | | |
| | திருவாளர்கள்: | | |
| | 1. இ. உமா மகேஸ்வரி, நகர்மன்ற துணைத்தலைவர் | | |
| | 2. கோ. சுந்தர்பாபு, நகர்மன்ற உறுப்பினர் | | |
| | 3. செ. கோவிந்தராஜன் நகர்மன்ற உறுப்பினர் | | |
| | 4. ஆர். சக்தி, நகர்மன்ற உறுப்பினர் | | |
| | 5. ப. பரமா, நகர்மன்ற உறுப்பினர் | | |
| | 6. தி. தமயந்தி, நகர்மன்ற உறுப்பினர் | | |
| | 7. தி. அர்ச்சனா நகர்மன்ற உறுப்பினர் | | |
| | 8. செ. புவனேஸ்வரி நகர்மன்ற உறுப்பினர் | | |
| | 9. இ. மகாலிங்கம் நகர்மன்ற உறுப்பினர் | | |
| | 10. கோ. துரைராஜன் நகர்மன்ற உறுப்பினர் | | |
| | 11. பா. சுதா நகர்மன்ற உறுப்பினர் | | |
| | 12. எம். சாந்தபாபா நகர்மன்ற உறுப்பினர் | | |
| | 13. டி. ரூபதி நகர்மன்ற உறுப்பினர் | | |
| | 14. ச. அண்ணாதுரை நகர்மன்ற உறுப்பினர் | | |
| | 15. ஏ. சண்முகம் நகர்மன்ற உறுப்பினர் | | |
| | 16. கே. ரவிக்குமார் நகர்மன்ற உறுப்பினர் | | |
| | 17. வி. முகேஷ் நகர்மன்ற உறுப்பினர் | | |

| வ. எண். | பொருள் |
|---|---|
| | 18. அ. தமிழ்வாணி நகர்மன்ற உறுப்பினர் |
| | 19. செ. வினோத்குமார் நகர்மன்ற உறுப்பினர் |
| | 20. ரா. புனிதமதி நகர்மன்ற உறுப்பினர் |
| | 21. மு. உதயணன் நகர்மன்ற உறுப்பினர் |
| | 22. ஜ. பவித்ரா நகர்மன்ற உறுப்பினர் |
| | 23. மு. ஜெயந்தி நகர்மன்ற உறுப்பினர் |
| | 24. சி. சக்திவேல் நகர்மன்ற உறுப்பினர் |
| | 25. வை. உமா நகர்மன்ற உறுப்பினர் |
| | 26. செசா. பாலகிருஷ் நகர்மன்ற உறுப்பினர் |

**நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்பட்ட சிறப்பு தீர்மானம்**

**பொருள் எண்.1**

- அரசாணை நிலை எண்.94, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்வழங்கல் துறை, நாள்.01.11.2021 ன் படி திருக்கோவிலூர் பேரூராட்சியாக இருந்ததை இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்ட தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு திருக்கோவிலூர் நகர மன்றத்தின் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறோம் மேலும் தமிழக மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் தமிழ்நாட்டின் முதல்வராக பொறுப்பேற்றவுடன் கொரோனா காலங்களில் சிறப்பாக அரசை வழிநடத்தி அனைத்து தரப்பு மக்களுக்கும் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றியும் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை அறிவித்து அத்திட்டங்களை தங்குதடையின்றி மக்களை சென்றடையும் வகையில் உள்ளாட்சி அமைப்பு தேர்தலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் அனைத்து மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளை கைப்பற்றி அமோக வெற்றி பெற்றதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு இந்நகர்மன்றம் சார்பாக நன்றிகலந்த வணக்கத்தையும், பாராட்டுகளையும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் அனைத்து பேரூராட்சிகள் / நகராட்சிகளும் அமோக வெற்றி பெற்றதற்கு அயராது பாடுபட்ட மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்நகர்மன்றம் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.
- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உள்ளாட்சியிலும், நல்லாட்சி வேண்டுகோளை ஏற்று திருக்கோவிலூர் நகராட்சி நகர் மன்ற உறுப்பினர்களை தேர்வு செய்த வாக்காளர்களுக்கு இந்நகர்மன்றம் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்

| தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|
| 1. | பதிவு செய்யப்பட்டது |

# தீர்மான புத்தகம்

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|

**பொருள் எண்.2**

**துணைத்தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் மன்ற பொருள்.**

1. திருக்கோவிலூர் நகராட்சி நகர் முழுவதும் குரங்கு தொல்லை மிக அதிகமாக உள்ளது. அதனை கூண்டு வைத்து பிடித்து காட்டில் விட நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.
2. தெருகளில் சுற்றி திரியும் தெரு நாய்களை கண்டு பொது மக்களிடம் இருந்து புகார் வந்த வண்ணம் உள்ளது. எனவே அதனை பிடித்து கருத்தடை செய்ய நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.
3. மார்கெட் தெருவில் உள்ள பொது கூட்ட மேடை அருகில் சிறுநீர் கழிப்பிடம் மாறி துர்நாற்றம் வீசுகிறது எனவே, மேற்படி இடத்தில் கழிப்பிட வசதி ஏற்படுத்தி தர கேட்டுக்கொள்ளப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

2. அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.3**

திருக்கோவிலூர் நகராட்சியில் 11/2021 முதல் 03/2022 மாதத்தில் பதிவு செய்யப்பட்ட, பிறப்பு, இறப்பு மற்றும் இறந்து பிறந்தவை பதிவுகள் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது

| மாதம் | பிறப்பு | இறப்பு | இறந்து பிறந்தவை |
|---|---|---|---|
| 11/ 2021 | 24 | 10 | - |
| 12/ 2021 | 22 | 7 | |
| 01/ 2022 | 40 | 11 | 0 |
| 02/ 2022 | 11 | 19 | - |
| 03/ 2022 | 15 | 23 | 0 |

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

3. மன்றம் அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.4**

திருக்கோவிலூர் நகராட்சிக்கு 11/2021 முதல் 03/2022 மாதத்தில் வரப்பெற்ற அரசாணைகள் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

4. மன்றம் அனுமதிக்கப்பட்டது

# தீர்மான புத்தகம்

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|

**பொருள் எண்.5**

திருக்கோவிலூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் 02/2022 மற்றும் 03/2022 நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

5. மன்றம் அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.6**

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் பேரூராட்சியினை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு ஏற்கனவே இருந்த 18 வார்டுகள் 27 வார்டுகளாக எல்லை மறுவரையறை செய்யப்பட்டு இயங்கி வருகிறது. 3 வருவாய் கிராமங்களை உள்ளடங்கிய இந்நகராட்சியின் மொத்த பரப்பளவு 11.99 சதுர கி.மீ ஆகும். 57 கி.மீ நீளம் கொண்ட 311 தெருக்களை உள்ளடங்கிய இந்நகராட்சியின் 2011 ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் 30212 தற்போதைய மக்கள் தொகை 39277 ஆகும். இந்நகராட்சியில் பொது சுகாதார பணிகள், குடிநீர் விநியோகப் பணிகள் , தெருமின் விளக்கு பராமரித்தல் மற்றும் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் ஆகியவற்றினை தினசரி தல ஆய்வு மேற்கொள்ள வாகனம் தேவைப்படுகிறது. மேலும் நகராட்சி நிர்வாக உயர் அலுவலர்களது ஆய்வு கூட்டங்களில் ஆணையர், நகராட்சி பொறியாளர் ஆகியோர் கலந்து கொள்ள சென்னை மற்றும் கள்ளக்குறிச்சி செல்ல வாகனம் தேவைப்படுவதாலும் மற்றும் நகராட்சி தலைவர் அவர்கள் நகரினை ஆய்வு மேற்கொள்ள வாகனம் தேவைப்படுகிறது. எனவே இந்நகராட்சிக்கு ஈப்பு வாகனம் 3 எண்ணிக்கைகள் வாங்குவதற்கும், மேற்படி செலவினத் தொகையினை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கும் மேலும், நகர் மன்ற தலைவர் முன்அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பியதற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

அலுவலக குறிப்பு : நகர்மன்ற தலைவர் முன்அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பியதற்கு மன்ற ஒப்புதல் வழங்கலாம்.

6. ஒப்புதல் வழங்கப்பட்டது

7. அனுமதிக்கப்பட்டது

(ந.க.எண்.76/2022/இ1)

**பொருள் எண்.7**

தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.

# தீர்மான புத்தகம்

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|

15–ஆவது மத்திய நிதி ஆணையம், 2022–2023–ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e .Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ருட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை(நிலை)எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை(நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018 ஆகியவற்றில் சொத்து வரி/ காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை(நிலை)எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.11.2019–ன் படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

# தீர்மான புத்தகம்

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|

சொத்து வரி / காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022–2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்து வரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நிதி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>சொத்துவரி:</u>**

குடியிருப்பு கட்டடங்கள்(**Residential Building**) :

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601-1200 | 1.5 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2 |

குடியிருப்பு அல்லாத கட்டடங்கள்(**Non-Residential Building**) :

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

# தீர்மான புத்தகம்

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|

மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:

1) 600 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
2) 601 முதல் 1200 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

**காலிமனை வரி சீராய்வு:**

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

**தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:**

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும் திருக்கோவிலூர் நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதித்தேவை உள்ளது.

| வ. எண். | செலவின வகைப்பாடு | தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி(Current Liabilities) (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின்கட்டணம் | 0.12 |
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விபரம் | 0.45 |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விபரம் ( டுபிட்கோ, டுபிசெல், பிற) | 0.09 |
| 4 | பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஒய்வுக்கால பணப்பயன், ஒய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி , நகராட்சியின் பங்குத்தொகை மற்றும் பிற பணப்பயன்கள் ( நிலுவைத் தொகை) | 0.15 |
| | மொத்தம் | **0.81** |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81–A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், திருக்கோவிலூர் நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்து

வரி/காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

# தீர்மான புத்தகம்

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|

வரி/காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

| வார்டு எண் | தெருக்களின் பெயர் | மண்டலம் |
|---|---|---|
| 1 | யூனியன் ஆபிஸ்ரோடு | A |
| 1 | ஆஸ்பி' ல் ரோடு,( A Zone) வெள்ளை விநாயகர் கோவில் தெரு, | A |
| 1 | ஆஸ்பி' ல் ரோடு,வெள்ளை விநாயகர் கோவில் தெரு, ,( C Zone) | C |
| 1 | கீழையூர்மாரியம்மன் கோவில்தெரு | C |
| | | |
| 2 | 1) கீழையூர் வா க்கு தெரு மேற்கு பகுதி 1 முதல் 160 முடிய | B |
| 2 | 2) கீழையூர் தெற்கு தெரு மேற்கு பகுதி 1 முதல் 154 முடிய முழுவதும் | B |
| 2 | கல்பா ச் சந்து, | B |
| | | |
| 3 | கீழையூர் வா க்கு தெரு கிழக்கு 1 முதல் 96 முடிய முழுவதும் | B |
| 3 | பொங்க மே' டுத்தெரு, | B |
| 3 | கீழையூர் தெற்கு தெரு கிழக்கு 1 முதல் 91 முடிய முழுவதும் | B |
| 3 | கீழையூர் பிள்ளையார் கோவில் தெரு | B |
| | | |
| 4 | அருந்ததியர் தெரு | C |
| 4 | கீழையூர்வள்ளுவர்தெரு, | C |
| 4 | தாசர்புரம் வா க்கு பகுதி 1 முதல் 120 முடிய | C |
| | | |
| 5 | என்.ஜி.ஜி.ஓ நகர் மீனா' சி நகர் | A |
| 5 | என்.ஜி.ஜி.ஓ நகர் திருவள்ளுவர் தெரு | A |
| 5 | என்.ஜி.ஜி.ஓ நகர் வ.உ .சிதெரு | A |
| 5 | என்.ஜி.ஜி.ஓ நகர் திலகர்தெரு,இந்திரா காந்தி தெரு | A |
| 5 | என்.ஜி.ஜி.ஓ நகர் பாரதியார் தெரு, | A |
| | | |
| 6 | என்.ஜி.ஜி.ஓ நகர் பெரியார் தெரு, | A |
| 6 | பி ாரியம்மன்கோயில்தெரு | A |
| 6 | என்.ஜி.ஜி.ஓ.நகர் நேருதெரு | A |
| 6 | என்.ஜி.ஜி.ஓ.நகர் வள்ளலார் தெரு | A |
| 6 | என்.ஜி.ஜிஓ நகர் காமராஜர் தெரு, | A |
| | | |

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|

| | | |
|---|---|---|
| 7 | வடக்கு தெரு 1 முதல் 31 முழுவதும் | A |
| 7 | வானமாமலை தெரு | A |
| 7 | சன்னதி தெரு | A |
| 7 | பழைய தாலுக்கா விதி , 2 | A |
| 7 | புதுத்தெரு, | B |
| | | |
| 8 | கட்ட கோபுர தெரு | A |
| 8 | மாட விதி, | B |
| 8 | பழைய தாலுக்கா விதி 1 முதல் 27 முடிய | A |
| 8 | வடக்கு தெரு, 1 முதல் 116 | A |
| 8 | பெருமாள் நாயக்கன் தெரு, 194 முதல் 295 முடிய | B |
| | | |
| 9 | மேற்கு தெரு | A |
| 9 | தியாகி வடிவேல் நகர் | A |
| | | |
| 10 | பெருமாள் நாயக்கன் தெரு, 1 முதல் 193 முடிய | B |
| 10 | பள்ளிவாசல் தெரு | A |
| 10 | காட்டம் பூசாரி தெரு,சின்ன கடை தெரு( A Zone) | B,A |
| 10 | காட்டம் பூசாரி தெரு, ( B Zone) சின்ன கடை தெரு | B,A |
| | | |
| 11 | மார்க்கட் தெரு, | A |
| 11 | ருத்தரப்ப நாயக்கன் தெரு, | B |
| 11 | கர்ணம் தெரு, | B |
| | | |
| 12 | கிழக்கு தெரு, | A |
| 12 | தெப்பகுள தெரு | B |
| 12 | தெப்பகுள சந்து | B |
| | | |
| 13 | செவலை ரோடு | A |
| 13 | மந்தரை தெரு | B |
| 13 | அஷ்ட்லட்சுமி நகர் | A |
| | | |
| 14 | என்.ஜி.ஜிஒ நகர் விவேகானந்தர் தெரு | A |
| 14 | என்.ஜி.ஜிஒ நகர் ஆஞ்சிநேயர் கோவில் தெரு, | A |
| 14 | அரசு ஊழியர் நகர் | A |

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|

| | | |
|---|---|---|
| 14 | அண்ணா நகர், | A |
| 14 | என்.ஜி.ஜிஓ நகர் நேதாஜி தெரு, | A |
| | | |
| 15 | தாசர்புரம் 1 முதல் 134 முடிய | C |
| 15 | புதுக்காலனி | C |
| | | |
| 16 | சைலோர் ரோடு, | C |
| 16 | கீழைப்பூர் சைலோர் ரோடு (முதல் சந்து) | C |
| | | |
| 17 | அருணாசலம் பிள்ளை தெரு | B |
| 17 | தெற்கு தெரு | A |
| | | |
| 18 | லாலா தோப்பு தெரு, | B |
| 18 | பருவத ராஜகுல தெரு, | B |
| 18 | தெற்கு தெரு, 1 முதல் 30 | A |
| | | |
| 19 | ஜீவா நகர், ஆடு தொட்டி சந்து | C |
| 19 | திடீர்குப்பம் 1 முதல் 88 | C |
| 19 | நாவிதர் சந்து, | C |
| 19 | சந்தப்பேட்டை வடக்கு தெரு 1 முதல் 79 | A |
| | | |
| 20 | கங்கை அம்மன் கோவில் தெரு, | |
| 20 | கங்கையம்மன் கோவில் தெரு திடீர்குப்பம் 11 முதல் 64 | C |
| 20 | சந்தப்பேட்டை வடக்கு தெரு, 1 முதல் 130 முடிய | A |
| 20 | காவேரி சந்து, | C |
| | | |
| 21 | வடக்கு தெரு 1 முதல் 86 | A |
| 21 | சந்தப்பேட்டை காலனி | C |
| 21 | சந்தப்பேட்டை தெற்கு தெரு 1 முதல் 8 முடிய | B |
| | | |
| 22 | சந்தப்பேட்டை வடக்கு தெரு 1 முதல் 172 முடிய | A |
| 22 | சந்தப்பேட்டை தெற்கு தெரு 11 முதல் 110 முடிய | B |
| 22 | பள்ளிவாசல் தெரு 1 முதல் 3 முடிய | B |
| | | |

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|

| | | |
|---|---|---|
| 23 | முகமது சாகிப் நகர் | B |
| 23 | பள்ளிவாசல் தெரு 1 முதல் 117 | B |
| 23 | சந்தப்பேட்டை தெற்கு தெரு 1 முதல் 111 | B |
| | | |
| 24 | சந்தப்பேட்டை கனகனந்தல் ரோடு, | C |
| 24 | எம்.ஜி.ஆர் நகர் | C |
| 24 | ஆர்.எம்.கே.நகர், | C |
| 24 | சந்தப்பேட்டை தக்கா | C |
| 24 | சந்தப்பேட்டை எழில் நகர் | C |
| | | |
| 25 | சந்தப்பேட்டை ஆசனூர் ரோடு 1 முதல் 229 முடிய | A |
| 25 | சந்தப்பேட்டை ஆசிரியர் நகர், | B |
| | | |
| 26 | சந்தப்பேட்டை அம்பேத்கர் காலனி, | C |
| 26 | சந்தப்பேட்டை மல்லிகை நகர், | B |
| 26 | சந்தப்பேட்டை உண்ணாமலை நகர், | B |
| 26 | சந்தப்பேட்டை கிரீன்டல் நகர், | B |
| 26 | சந்தப்பேட்டை விஜயலட்சுமி நகர், | B |
| 26 | சந்தப்பேட்டை நவசக்தி நகர், | B |
| 26 | சந்தப்பேட்டை மகாவீர் நகர், | B |
| 26 | சந்தப்பேட்டை மங்களதாதா நகர், | B |
| 26 | சந்தப்பேட்டை ஜெயகணபதி நகர், | B |
| 26 | சந்தப்பேட்டை தென்றல் நகர், | B |
| 26 | சந்தப்பேட்டை சங்கரன் நகர், | B |
| 26 | சந்தப்பேட்டை கூட்டுறவு நகர், | B |
| | | |
| 27 | சந்தப்பேட்டை தியாகராஜர் நகர், | B |
| 27 | சந்தப்பேட்டை வி..ஓ நகர் | B |
| 27 | கபிலர்புரம் , | B |
| 27 | கார்த்திகேயன் நகர், | B |
| 27 | நாகராஜன் மின்நகர், | B |
| 27 | இருளர் காலனி | C |
| 27 | ஆசனூர் ரோடு 11முதல் 24 முடிய | A |

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|

**பொருள் எண்.8**

திருக்கோவிலூர் நகராட்சியின் நகர மன்ற உறுப்பினர்கள் மற்றும் நகராட்சி பணியாளர்கள் அவ்வப்போது நடைபெறும் பயிற்சி வகுப்புகள் மற்றும் பயணத்திட்டத்திற்கான பயணப்படி ஆகிய செலவுகளை வருவாய் நிதியிலிருந்து 2022 – 2023 ம் ஆண்டுக்கு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும்.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மான எண்: 8. — தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.9**

திருக்கோவிலூர் நகராட்சியின் எல்லைக்குட்பட்ட நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் ஆவின் பாலகம் அமைக்க திரு.வி.நவநீதகிருஷ்ணன் த/பெ. வெங்கடேசன் நெ.32, கிழக்கு தெரு, திருக்கோவிலூர் என்பவர் திருக்கோவிலூர் பேருந்து நிலையம் நுழைவு வாயிலில் தற்காலிகமாக உள்ள ஆட்டோ ஸ்டாண்ட் அருகில் இடம் கோரி விண்ணப்பம் அளித்துள்ளார். மேற்படி விண்ணப்பத்தை பரிசீலனை செய்யப்பட்டதில் ஆட்டோ ஸ்டாண்ட் அருகில் இடம் ஒதுக்குவது சம்மந்தமான திருக்கோவிலூர் பேரூராட்சி தனி அலுவலரின் தீர்மான எண்.411 நாள். 07.07.2021 ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து மேற்படி இடத்தின் வழிகாட்டு மதிப்பு பெற 30.09.2021 ல் கடிதம் அளிக்கப்பட்டு சார்திவாளர் அவர்களின் கடிதம் ந.க.எண்.567/ 2021 நாள். 11.10.2021 ன் படி வழிகாட்டு மதிப்பு பெறப்பட்டுள்ளது. மேலும் பொதுப்பணித்துறை மூலம் வாடகை நிர்ணயம் செய்யவும் 29.10.021 ல் அளிக்கப்பட்டு கடிதம் அளிக்கப்பட்டு செயற்பொறியாளர் பொது பணித்துறை கட்டிடம் ( கமப) கோட்டம் விழுப்புரம் கடித எண்.317 வ.பி / இ.நி.வ.அ.1 /கோ.2021 நாள்.17.11.2021 ன் படி தரை வாடகை மதிப்பு நிர்யணம் செய்து கடிதம் பெறப்பட்டுள்ளது. மேற்படி இந்நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் தல ஆய்வு 01/04/2022 அன்று மேற்கொண்டு மேற்படி இடத்தில் 10 x 10 என்ற அளவில் ஆவின் பாலகம் அமைக்க அனுமதி வழங்கலாம் என தெரிவித்துள்ளார். மேலும் வருவாய் பிரிவு அறிக்கையின் படி மாத வாடகை அடிப்படையில் மாதம் ஒன்றிக்கு ரூ.1650/- வீதம் வசூலித்துக்கொண்டு திருக்கோவிலூர் பேருந்து நிலையம் நுழைவு வாயில் அருகில் ஆவின் பாலகம் அமைக்க அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மான எண்: 9. — தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|

**பொருள் எண்.10**

திருக்கோவிலூர் நகராட்சியின் எல்லைக்குட்பட்ட நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் ஆவின் பாலகம் அமைக்க திரு. வெங்கடேசன் த/பெ. ஏழுமலை நெ.46,மந்தகரை வீதி திருக்கோவிலூர் என்பவர் திருக்கோவிலூர் ஐந்து முனை சந்திப்பில் கெங்கையம்மன் கோயில் அருகில் இடம் கோரி விண்ணப்பம் அளித்துள்ளார். மேற்படி விண்ணப்பத்தை பரிசீலனை செய்யப்பட்டதில் கெங்கையம்மன் கோயில் அருகில் இடம் ஒதுக்குவது சம்மந்தமான திருக்கோவிலூர் பேரூராட்சி தனி அலுவலரின் தீர்மான எண்.412 நாள். 07.07.2021 ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து மேற்படி இடத்தின் வழிகாட்டு மதிப்பு பெற 30.09.2021 ல் கடிதம் அளிக்கப்பட்டு சார்திவாளர் அவர்களின் கடிதம் ந.க.எண்.567/ 2021 நாள். 11.10.2021 ன் படி வழிகாட்டு மதிப்பு பெறப்பட்டுள்ளது. மேலும் பொதுப்பணித்துறை மூலம் வாடகை நிர்ணயம் செய்யவும் 29.10.021 ல் அளிக்கப்பட்டு கடிதம் அளிக்கப்பட்டு செயற்பொறியாளர் பொது பணித்துறை கட்டிடம் (கமப) கோட்டம் விழுப்புரம் கடித எண்.318 வ.பி / இ.நி.வ.அ.1 /கோ.2021 நாள்.17.11.2021 ன் படி தரை வாடகை மதிப்பு நிர்யணம் செய்து கடிதம் பெறப்பட்டுள்ளது. மேற்படி இந்நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் தல ஆய்வு 01/04/2022 அன்று மேற்கொண்டு மேற்படி இடத்தில் 10 x 10 என்ற அளவில் ஆவின் பாலகம் அமைக்க அனுமதி வழங்கலாம் என தெரிவித்துள்ளார். மேலும் வருவாய் பிரிவு அறிக்கையின் படி மாத வாடகை அடிப்படையில் மாதம் ஒன்றிக்கு ரூ.1500/- வீதம் வசூலித்துக்கொண்டு திருக்கோவிலூர் கெங்கையம்மன் கோயில் அருகில் ஆவின் பாலகம் அமைக்க அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

10. அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.11**

திருக்கோவிலூர் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் தினசரி வந்து செல்லும் பேருந்துகளுக்கு குத்தகை தொகை வசூலித்து கொள்ளும் உரிமம் புதுப்பிக்கப்படாததால் 2021– 2022 ஆண்டு குத்தகைதாரருக்கு பல முறை அறிவிப்பு கடிதம் அளித்தும் நேரில் அறிவுறுத்தியும் நிலுவை மற்றும் நடப்பு குத்தகை செலுத்தப்படவில்லை. எனவே மேற்படி குத்தகை இனத்தை துறை மூலம் வசூலிக்க ஆணையாளர் அவர்களால் தெரிவிக்கப்பட்டதற்கிணங்க ஏற்கனவே 08.03.2022 முதல் அலுவலகம் மூலம் வசூல் செய்யப்படுகிறது. மேற்படி01.04.2022 முதல் 31.03.2025 முடிய மூன்றாண்டுகளுக்கு குத்தகை / பொது ஏலம் விட இவ்வலுவலக ந.க.எண். ந.க.எண்.அ2/40 /2022 நாள்.09.03.2022–ன் மூலம் அறிவிப்பு செய்யப்பட்டது. மேற்படி பொது ஏலம் 23.03.2022 மற்றும் 29.03.2022–ல் நடைபெற்ற ஏலத்தில் எவரும் ஏலம் கோர முன் வராதால் மீண்டும் 12.04.2022 அன்று மறு ஏலம் கோரி வைக்கப்பட்டுள்ளது. எனவே 01.04.2022 முதல் துறை மூலமாக வசூலிக்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

( ந.க.எண்.அ 1 / 40 /2022)

11. அனுமதிக்கப்பட்டது

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|

**பொருள் எண்.12**

கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் பேரூராட்சியை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. தற்போது நிதியினை ஒரே நிதிக் கணக்கில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகராட்சியின் நிதி மேலாண்மையை திறம்பட செயல்படுவதற்காக நிதியினை மூன்று நிதிகணக்கின் தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அவை வருவாய் மற்றும் மூலதன நிதி, குடிநீர் மற்றும் கழிவுநீர் வடிகால் நிதி மற்றும் கல்வி நிதி தற்போது திருக்கோவிலூர் நகராட்சியின் கீழ் எவ்வித கல்வி நிறுவனங்களும் பாரமரிக்கப்படவில்லை என்பதால், நிதியினை வருவாய் மற்றும் மூலதன நிதி கணக்கு மற்றும் குடிநீர் மற்றும் கழிவுநீர் வடிகால் நிதி என இரண்டு தலைப்பின் கீழ் பராமரிக்கப்பட வேண்டும். குடிநீர், கழிவுநீர் வடிகால் நிதியில் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை திட்டம் தொடர்பான அனைத்து வருவாய்கள் மற்றும் செலவினம் மற்றும் அவை தொடர்பான சொத்துக்கள் அவை தொடர்பான பணியாளர்கள் ஊதியம் ஒய்வூதிய மற்றும் இதர பயன்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். கூடுதலாக சொத்துவரி, காலியிட வரி (ஆண்டு வாடகை மதிப்பில் 10 %) சதவீதத்தில் குடிநீருக்கான 1.00%, வடிகாலுக்காக 1.00%, ஆக மொத்தம் 2%, (ஆண்டு வாடகை மதிப்பில்) பங்கு பிரித்து வழங்கப்படும். வருவாய் மற்றும் மூலதன நிதியில் வரி மற்றும் வரியில்லா இனங்கள், சொத்துவரி மற்றும் காலிமனை வரியில் 8%, பங்கு இதர வருவாய் மற்றும் இதர சொத்துகள் மற்றும் செலவினங்கள், இதர பணியாளர்கள் ஊதியம், ஒய்வூதியம் மற்றும் இதர பயன்கள், சொத்துகள் பராமரிப்பு அல்லது மேம்படுத்துதல் செலவினங்கள் மற்றும் இதர செலவினங்கள் அனைத்தும் இக்கணக்கில் பராமரிக்கப்படும், எனவே இருவேறு தலைப்புகளில் வரும் வருவாய் மற்றும் செலவினங்களை பராமரிப்பதற்கு தனித்தனி வங்கி கணக்குகள் உருவாக்கிட மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

12. அனுமதிக்கப்பட்டது

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|

**பொருள் எண்.13**

அரசாணை நிலை எண்.94, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.01.11.2021ன் படி திருக்கோவிலூர் பேரூராட்சியாக இருந்ததை இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டு நகராட்சியாக செயல்படுகிறது. அதனை தொடர்ந்து சட்டமன்ற கூட்ட தொடரில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, மாண்மிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பு.23 ன் படி புதிய அலுவலக கட்டிடம் அமைக்க அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. எனவே செவலை ரோடு சர்வே எண்.170,171 ல் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் புதிய அலுவலக கட்டிடம் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டு ரூ.350.00 இலட்சத்தில் கருத்துரு சமர்பிக்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : சட்டமன்ற தொடர் அறிவிப்பின் படி புதிய அலுவலக கட்டிடம் அமைக்க கருத்துரு சமர்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.**

**(கோப்பு எண். 117 /2022/இ1)**

தீர்மான எண்: 13. மன்றம் அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.14**

அரசாணை நிலை எண்.94, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.01.11.2021ன் படி திருக்கோவிலூர் பேரூராட்சியாக இருந்ததை இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டு நகராட்சியாக செயல்படுகிறது. அதனை தொடர்ந்து சட்டமன்ற கூட்ட தொடரில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, மாண்மிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பு.13 ன் படி கசடு கழிவு மேலாண்மை திட்டம் செயல் படுத்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. எனவே நகராட்சிக்கு சொந்தமான கரடி கிராம சர்வே எண்.148/4 ,148/6 ல் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் கழிவு மேலாண்மை திட்டம் செயல் படுத்த இடம் தேர்வு செய்யப்பட்டு ரூ.180.00 இலட்சத்தில் கருத்துரு சமர்பிக்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : சட்டமன்ற தொடர் அறிவிப்பின் படி கசடு கழிவு மேலாண்மை திட்டத்தில் கருத்துரு சமர்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.**

**(கோப்பு எண். 140 /2022/இ1)**

தீர்மான எண்: 14 மன்றம் அனுமதிக்கப்பட்டது

| வ. எண். | பொருள் |
| --- | --- |
| | |

பொருள் எண்.15

பொது நிதியில் 2022– 2023 ம் ஆண்டு மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள்

1. திருக்கோவிலூர் பேரூராட்சியாக இருந்தபோது பொது நிதி திட்டம் 2021 – 2022 ம் ஆண்டு ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் அலுவலக வளாகத்தில் கூடுதல் கட்டிடம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. மேற்படி கட்டிடத்தில் கூடுதலாக ஒரு அறை அமைக்க செயல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டதற்கிணங்க, அலுவலக வளாகத்தில் கூடுதல் கட்டிடம் அமைக்க பணிகள் மேற்கொள்ளப்பட்டது. தற்போது மதிப்பீட்டினை விட கூடுதலாக பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்படி கட்டிடத்தில் வண்ணம் பூச்சு வேலை மற்றும் தளம் அமைத்தல் பணிகள் முடிக்க முடியாமல் உள்ளது. எனவே கூடுதல் மதிப்பீடு ரூ.6.00 இலட்சம் தயார் செய்து பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

2. திருக்கோவிலூர் நகராட்சி கீழையூர் வார்டு எண் – 2ல் கீழையூர் சுடுகாடு சுற்றுசுவர் அமைக்க ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

3. திருக்கோவிலூர் நகர்ாட்சிக்குட்பட்ட வார்டு எண்.13ல் செவலை ரோடில் வடிகால் அமைக்க ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

4. திருக்கோவிலூர் உலகளந்த பெருமாள் கோயில் தேர் திருவிழா முன்னிட்டு திருதேர் சுற்றி வரும் நான்கு மாட வீதிகளிலும் சேதமடைந்துள்ள சிமெண்ட் சாலையினை சீரமைக்க நகர மன்ற தலைவர் அவர்களால் தெரிவிக்கப்பட்டதற்கிணங்க, மேற்படி சாலையினை சீரமைக்கும் பணிக்கு ஆகும் செலவினத்தை பொது நிதியில் மதிப்பீடு தயார் செய்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- நிதி நிலைக்கு ஏற்ப பொது நிதியில் பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

| தீர்மான எண் | தீர்மானம் |
| --- | --- |
| 15 | மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டது |

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| | **பொருள் எண்.16**<br>திருக்கோவிலூர் பேரூராட்சியில் 2018– 2019 ம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டத்தில் தாசர்புரம் நடுதெருவில் சிமெண்ட் சாலை அமைக்க ரூ.3.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்படி பணி துவங்கும் போது அப்பகுதி மக்கள் வடிகாலுடன் சிமெண்ட் சாலை அமைக்க தெரிவித்து பணியினை செய்யாமல் நிறுத்தப்பட்டது. மேற்படி தாசர்புரம் நடுத்தெருவில் வடிகாலுடன் சிமெண்ட் சாலை அமைக்க கூடுதலாக ஆகும் செலவினத்தை பொது நிதியில் கூடுதல் மதிப்பீடு தயார் செய்து பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் | 16. | அங்கீகரிக்கப்பட்டது |
| | **பொருள் எண்.17**<br>திருக்கோவிலூர் தேர்வுநிலை பேரூராட்சியை அரசாணை (நிலை) எண்.94 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.01.11.2021–ன்படி நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. இந்நிலையில் பேரூராட்சியில் பணிபுரிந்து வரும் கணினி இயக்குபவர் –1, நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட நிலையில் இந்நகராட்சியில் கணினி புள்ளி விவர தொகுப்பாளர் பணியிடம் இந்நகராட்சியில் இல்லாததால் அனைத்து பணிகளையும் கணினியில் பதிவேற்றம் செய்ய முடியாமல் உள்ளது. இதனால் நகராட்சி அறிக்கையினை அரசிற்கு உடனுக்குடன் அனுப்ப முடியாததால் கணினி திட்ட புள்ளி விபர பதிவாளர் பணியிடத்தில் (Data Entry Operator), ஒரு தகுதிவாய்ந்த –1 நபர் மற்றும் பொறியல் பிரிவில் உள்ள தொழில்நுட்ப உதவியாளர் – 2, ஆக 3 நபர்களுக்கு தனியாக தனியார் நிறுவனத்திடம் ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்த அடிப்படையில் மேற்படி பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர் கள்ளக்குறிச்சி அவர்களால் நிர்ணயித்த ஊதிய விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>(கோப்பு எண். 40/ 2022 /அ 2)<br>குறிப்பு : ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம் | 17. | ஒப்பந்தப்புள்ளி கோரலாம் |

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|

## பொருள் எண்.18

திருக்கோவிலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 27 வார்டுகளில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ள நகர மன்ற தலைவர் மற்றும், நகர மன்ற துணைத்தலைவர், நகர மன்ற உறுப்பினர்கள் அளித்துள்ள கடிதத்தின்படி இணைப்பில் கண்டுள்ளவாறு ஒவ்வொரு வார்டிற்கும் தலா ரூ.3.00 மதிப்பீட்டில் அத்தியாவசிய பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | திட்டப்பணிகளின் விபரம் | நீளம் (மீ) | அகலம் (மீ) | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | வார்டு எண்.1, மாரியம்மன் கோவில் தெருவில் படித்துறை அமைத்தல் | | | 1.50 |
| 2 | | வார்டு எண்.1, வெள்ளை பிள்ளையார் கோவில் தெருவில் படித்துறை அமைத்தல் | | | 1.50 |
| 3 | 13 | வார்டு எண்.13, செவலை ரோடு இந்தியன் வங்கி எதிரில் வடிகால் அமைத்தல் | 80 | 1.20 | 3.00 |
| 4 | 3 | வார்டு எண்.3, பொங்க மேட்டுத் தெருவில் 90 எம்.எம் .பி.வி.சி மற்றும் ஜி.ஐ. பைப்லைன் அமைத்தல் | 300 | | 1.85 |
| 5 | | வார்டு எண்.3 ல் சிமெண்ட் சாலை பேட்ஜ் ஒர்க்ஸ் மற்றும் வடிகால் அமைத்தல் | 30 | | 1.15 |
| 6 | 4 | வார்டு எண்.4 அருந்ததியர் தெருவில் வடிகால் மற்றும் ஆழ்துளை கிணறு அமைத்தல் | 40 | 1.00 | 3.00 |
| 7 | 5 | வார்டு எண்.5 திலகர் தெருவில் வடிகால் அமைத்தல் | 83 | 1.00 | 3.00 |
| 8 | 6 | வார்டு எண்.6, வள்ளாலார் தெருவில் வடிகால் அமைத்தல் | 80 | 1.20 | 3.00 |
| 9 | | பிடாரியம்மன் கோவில் தெருவில் சாய்தளம், சிறுபாலம் மற்றும் பேட்ஜ் ஒர்க்ஸ் செய்தல் | | | 3.00 |
| 10 | 7 | வார்டு எண்.7, வாணமாமலை தெருவில் சிறுபாலம் மற்றும் பேட்ஜ் ஒர்க்ஸ் செய்தல் | | | 3.00 |
| 11 | 8 | வார்டு எண்.8, கங்கையம்மன் கோவில் தெருவில் வடிகால், சிறுபாலம் 90 எம்.எம் .பி.வி.சி மற்றும் ஜி.ஐ. பைப்லைன் அமைத்தல் | 30 | 1.00 | 3.00 |
| 12 | 9 | வார்டு எண்.9, தியாகி வடிவேல் நகரில் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 43 | 1.00 | 3.00 |
| 13 | 10 | வார்டு எண்.10, பெருமாள் நாயக்கர் தெரு மற்றும் காட்டாம் பூசாரி தெருவில் ஆழ்துளை கிணறு மற்றும் பவர் பம்ப் அமைத்தல் | | | 3.00 |
| 14 | 11 | வார்டு எண்.11, மார்கட் தெருவில் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 70 | 1.00 | 6.00 |
| 15 | 12 | செவலை ரோடில் வடிகால் அமைத்தல் | 65 | 2.40 | 9.70 |
| 16 | | செவலை ரோடில் சிறுபாலம் அமைத்தல் | | | 2.30 |
| 17 | 13 | வார்டு எண். 13, ஸ்ரீநிதி அவென்யூ நகரில் 90 எம்.எம். பைப்லைன் அமைத்தல் | 300 | | 1.50 |
| 18 | 13 | வார்டு எண். 13, அஷ்டலட்சுமி நகரில் 90 எம்.எம். பைப்லைன் அமைத்தல் | 300. | | 1.50 |
| 19 | 14 | வார்டு எண்.14, அரசு ஊழியர் நகரில் வடிகால் அமைத்தல் | 83 | 1.20 | 3.00 |
| 20 | 15 | வார்டு எண்.15, தாசர்புரம் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 83 | 1.00 | 3.00 |
| 21 | 16 | வார்டு எண்.16, அண்ணா நகர் வடிகால் அமைத்தல் | 83 | 1.00 | 3.00 |
| 22 | 17 | வார்டு எண்.17, அருணாசலம் பிள்ளை தெருவில் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 60 | 1.00 | 3.00 |

18. அனுமதிக்கப்பட்டது

| வ. எண். | பொருள் |
|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 23 | 18 | வார்டு எண்.18, லாலா தோப்பு தெருவில் வடிகால் அமைத்தல் | 80 | 1.20 | 3.00 |
| 24 | 19 | வார்டு எண்.19, சந்தப்பேட்டை ஜீவா நகர் மற்றும் ஆடு தொட்டி சந்தில் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 43 | 1.00 | 3.00 |
| 25 | 20 | எஸ்.எம்.ஷா நகரில் 90 எம்.எம் பைப்லைன் அமைத்தல் | 300 | | 1.55 |
| 26 | | வார்டு எண்.20, சந்தப்பேட்டை சங்கராபுரம் மெயின் ரோடில் சிறுபாலம் அமைத்தல் | | | 1.45 |
| 27 | 21 | வார்டு எண்.21, சந்தப்பேட்டை காலனியில் வடிகால் அமைத்தல் | 280 | 4.00 | 3.00 |
| 28 | 22 | வார்டு எண்.22, பள்ளிவாசல் தெரு, தெற்கு தெரு மற்றும் சங்கராபுரம் ரோடில் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 40 | 1.00 | 3.00 |
| 29 | 23 | வார்டு எண்.23, பள்ளிவாசல் தெருவில் சிறுபாலம் மற்றும் வடிகால் அமைத்தல் | 48 | 3.00 | 3.00 |
| 30 | 24 | வார்டு எண்.24, நல்ல தண்ணீர் குளம் சிமெண்ட் சாலை அமைத்தல் | 50 | 2.10 | 1.50 |
| 31 | | நல்ல தண்ணீர் குளம் சீரமைத்தல் | | | 1.50 |
| 32 | 25 | ஜே.எம். கோர்ட் சந்தில் சிமெண்ட் தளம் மற்றும் சிறுபாலம், மல்லிகை நகரில் சிறுபாலம் அமைத்தல் | | | 1.50 |
| 33 | | ஆசிரியர் நகரில் பூங்கா சீரமைத்தல் | | | 1.50 |
| 34 | 26 | சங்கரன் நகரில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 80 | 1.20 | 3.00 |
| 35 | 27 | தியாகராஜர் நகரில் வடிகால் அமைத்தல் | 80 | 1.20 | 3.00 |
| 36 | | அலுவலக வளாகத்தில் கூடுதல் கட்டிடம் வண்ணம் பூச்சு வேலை மற்றும் தளம் அமைத்தல் | | | 6.00 |
| | | மொத்தம் | | | 102 |

அலுவலக குறிப்பு :- நிதி நிலைக்கு ஏற்ப பொது நிதியில் பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**<u>பொருள் எண்.19</u>**

அரசாணை நிலை எண்.94, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.01.11.2021ன் படி திருக்கோவிலூர் பேரூராட்சியாக இருந்ததை இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டு நகராட்சியாக செயல்படுகிறது. அதனை தொடர்ந்து சட்டமன்ற கூட்ட தொடரில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பு.15 ன் படி சமுதாய கழிப்பிடம் மற்றும் பொது கழிப்பிடம் அமைக்க அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. எனவே செவலை ரோடு சர்வே எண்.200,205ல் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் சமுதாய கழிப்பிடம் மற்றும் பொது கழிப்பிடம் அமைக்க இடம்

| தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|
| 19. | அங்கீகரிக்கப்பட்டது. |

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|

கழிப்பிடம் மற்றும் பொது கழிப்பிடம் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டு ரூ.60 இலட்சத்தில் கருத்துரு சமர்பிக்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : சட்டமன்ற தொடர் அறிவிப்பின் படி சமுதாய கழிப்பிடம் மற்றும் பொது கழிப்பிடம் அமைக்க கருத்துரு சமர்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.**

**(கோப்பு எண். 141/2022/இ1)**

**பொருள் எண்.20**

அரசாணை நிலை எண்.94, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.01.11.2021ன் படி திருக்கோவிலூர் பேரூராட்சியாக இருந்ததை இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டு நகராட்சியாக செயல்படுகிறது. அதனை தொடர்ந்து சட்டமன்ற கூட்ட தொடரில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பு.20 ன் படி நவீன எரிவாயு தகன மேடை அமைக்க அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. எனவே தலைமை நீரேற்று சாலையில் உள்ள சர்வே எண்.533ல் உள்ள பொது மக்கள் பயன்பாட்டில் உள்ள சுடுகாடு இடத்தில் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டு ரூ.150.00 இலட்சத்தில் கருத்துரு சமர்பிக்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : சட்டமன்ற தொடர் அறிவிப்பின் படி நவீன எரிவாயு தகன மேடை அமைக்க கருத்துரு சமர்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.**

**(கோப்பு எண். 143/2022/இ1)**

20 — அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.21**

அரசாணை நிலை எண்.94, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.01.11.2021ன் படி திருக்கோவிலூர் பேரூராட்சியாக இருந்ததை இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டு நகராட்சியாக செயல்படுகிறது. அதனை தொடர்ந்து சட்டமன்ற கூட்ட தொடரில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பு.17 ன் படி பூங்கா அமைக்க அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. எனவே சந்தப்பேட்டை சர்வே எண்.692 1 முதல் 12 மற்றும் 692 2A1 ல் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் பூங்கா மேம்பாடு இடம் தேர்வு செய்யப்பட்டு ரூ. 26.00 இலட்சத்தில் கருத்துரு சமர்பிக்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : சட்டமன்ற தொடர் அறிவிப்பின் படி பூங்கா அமைக்க கருத்துரு சமர்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.**

**(கோப்பு எண். 144/2022/இ1)**

21 — அனுமதிக்கப்பட்டது

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| | **பொருள் எண்.22**<br><br>அரசாணை நிலை எண்.94, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.01.11.2021ன் படி திருக்கோவிலூர் பேரூராட்சியாக இருந்ததை இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டு நகராட்சியாக செயல்படுகிறது. அதனை தொடர்ந்து சட்டமன்ற கூட்ட தொடரில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பு.24 ன் படி நூலகம் மற்றும் அறிவுசார் மையம் அமைக்க அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. எனவே செவலை ரோடு அண்ணாநகர் சர்வே எண்.163 ல் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டு ரூ. 200.00 இலட்சத்தில் கருத்துரு சமர்பிக்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் கோரப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு : சட்டமன்ற தொடர் அறிவிப்பின் படி நூலகம் மற்றும் அறிவுசார் அமையம் கருத்துரு சமர்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.**<br><br>**(கோப்பு எண். /2022/இ1)** | 22. | அனுமதிக்கப்பட்டது |
| | **பொருள் எண்.23**<br><br>கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் நகராட்சியில் மேற்கொள்ளப்படும் சில்லரை செலவினம் மேற்கொள்ள முன்பணமாக ரூ.5000/– வழங்க மன்றம் அனுமதிக்கு. | 23. | அனுமதிக்கப்பட்டது |
| | **பொருள் எண்.24**<br><br>திருக்கோவிலூர் நகராட்சிக்கு 2022–2023 ம் ஆண்டிற்கு கீழ்கண்டவாறு தேவையான பொருள்களை சப்ளை செய்ய கடந்த 23.03.2022 புதன் கிழமை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வ.எண் 1 முதல் 4 மற்றும் 7 க்கான இனங்களுக்கு வைப்புத்தொகை மட்டில் செலுத்தப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் ஏதும் பெறப்படவில்லை எஞ்சிய இனம் 8 க்கு எவரும் ஒந்தப்புள்ளி கோரப்படவில்லை. மேலும் இனம் எண்.5,6,9,10 மற்றும் 11 க்கு மட்டில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. எனவே கீழ்காணும் இனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்படாத காரணத்தால் மேற்படி இனங்களின் ஒப்பந்தம் இரத்து செய்யவும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்ட இனங்ளுக்கான ஒப்பு நோக்கு பட்டியலில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. | 24. | இனம் எண். 5,6,9,10,11<br>குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்க<br>அனுமதி வழங்கப்பட்டது |

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|

வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள விபர பட்டியல்

| வ. எண் | பொருட்களின் விபரம் | வ. எண் | ஒப்பந்தபுள்ளி வரபெற்ற நிறுவனத்தின் பெயர் | செலுத்து சீட்டு எண் நாள். | தொகை ரூ. | கூடுதல் குறைவு |
|---|---|---|---|---|---|---|
| 1 | நகராட்சி தெரு மின்விளக்குகளுக்கு தேவையான 40 W டியூப் லைட், 40W சோக், ஸ்டாட்டர்கள் , 250W சோடியம் ஆவி விளக்குகள் மற்றும் மொர்க்குரி , LED, பவர் சேவர் பல்புகள் மற்றும் உயர்கோபுர மின் விளக்குகள் மற்றும் உதிரிபாகங்கள் –( ISI தரச்சான்றுடன், நிறுவனத்தின் பெயருடன் கொடுக்க வேண்டும் ) | 1 | பாரதி ஏஜென்சிஸ் 131/2 மேற்கு தெரு திருக்கோவிலூர் | 1777/ 23.03.22 | 15000/– | நிராகரிக்கப்பட்டது |
| | | 2 | ஸ்ரீ முருகா டிரேடர் ஐந்து மூலை ரோடு ஸ்ரீனிவாசா தியேட்டர் அருகில் திருக்கோவிலூர் | 1778/ 23.03.22 | 15000/– | நிராகரிக்கப்பட்டது |
| 2 | நகராட்சியில் பொது சுகாதார உபயோகத்திற்கு தேவையான சுண்ணாம்புதூள், பினாயில், மற்றும் பிளிச்சிங் பவுடர் (நிலை 33.5%) சப்ளை செய்தல் (ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியாக) | 1 | பாரதி ஏஜென்சிஸ் 131/2 மேற்கு தெரு திருக்கோவிலூர் | 1779/ 23.03.22 | 15000/– | நிராகரிக்கப்பட்டது |
| | | 2 | ஸ்ரீ முருகா டிரேடர் ஐந்து மூலை ரோடு ஸ்ரீனிவாசா தியேட்டர் அருகில் திருக்கோவிலூர் | 1780/ 23.03.22 | 15000/– | நிராகரிக்கப்பட்டது |
| 3 | பொதுசுகாதாரத்திற்கு தேவையான மண்வெட்டி, கடப்பாறை, இரும்பு சட்டிகள், வாளிகள், கொக்கிகள், துப்புரவு பணியாளர்களுக்கு கையுறைகள், காலூறைகள் போன்ற இதர உபகரணங்கள் சப்ளை செய்தல் | 1 | பாரதி ஏஜென்சிஸ் 131/2 மேற்கு தெரு திருக்கோவிலூர் | 1781/ 23.03.22 | 5000/– | நிராகரிக்கப்பட்டது |
| | | 2 | ஸ்ரீ முருகா டிரேடர் ஐந்து மூலை ரோடு ஸ்ரீனிவாசா தியேட்டர் அருகில் திருக்கோவிலூர் | 1782/ 23.03.22 | 5000/– | நிராகரிக்கப்பட்டது |
| 4 | நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் குடிநீர் பணிகளுக்கு தேவையான P.V.C.Pipe G.I. Pipe, மின்மோட்டார்கள், கேட்வால்வுகள் மற்றும் உதிரிபாகங்கள் சப்ளை செய்தல். | 1 | பாரதி ஏஜென்சிஸ் 131/2 மேற்கு தெரு திருக்கோவிலூர் | 1783/ 23.03.22 | 15000/– | நிராகரிக்கப்பட்டது |
| | | 2 | ஸ்ரீ முருகா டிரேடர் ஐந்து மூலை ரோடு ஸ்ரீனிவாசா தியேட்டர் அருகில் திருக்கோவிலூர் | 1784/ 23.03.22 | 15000/– | நிராகரிக்கப்பட்டது |

| வ. எண். | பொருள் | | | | | | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | நகராட்சி அலுவலகத்திற்கு தேவையான புத்தகங்கள், படிவங்கள், நோட்டீஸ்கள் அச்சடித்தல் மற்றும் பைண்டிங் செய்து கொடுத்தல் | 1 | என்.கே.வி போஸ்டர்ஸ் 62/64 லட்சுமி காம்பௌக்ஸ் சன்னதி தெரு திருக்கோவிலூர் | 1785/ 23.03.22 | 3000/– | குறைவு | | |
| | | 2 | முருகா டிஜிட்டல் நெ.9 சௌபி காம்பௌக்ஸ் கிழக்கு தெரு திருக்கோவிலூர் | 1786/ 23.03.22 | 3000/– | கூடுதல் | | |
| 6 | இந்தியா மார்க்–2 கைப்பம்பு கழற்றி சரி செய்து மீண்டும் பொருத்தி கொடுத்தல் மற்றும் பைப்லைன் பழுது பார்த்தல் | 1 | எஸ்.விஜய் த/பெ.சேகர் 3/36, பிள்ளையார் கோயில் தெரு வடமருதூர் | 1787/ 23.03.22 | 5000/– | குறைவு | | |
| | | 2 | எ.நாகராஜ் த/பெ.ஆதிகேவசன் தனலட்சுமி நகர் அரகண்டநல்லூர் | 1788/ 23.03.22 | 5000/– | கூடுதல் | | |
| 7 | 1HP, 3 HP, 5HP, 7 ½ HP, 10HP ,12 ½ HP 15 HP, 20HP, 25 HP மற்றும் 30 HP நீர் மூழ்கி மோட்டார், மற்றும் பம்ப்கள் பழுது பார்த்தல் மற்றும் காயில் கட்டுதல் முதலியன. | 1 | பாரதி ஏஜென்சீஸ் 131/2 மேற்கு தெரு திருக்கோவிலூர் | 1789/ 23.03.22 | 5000/– | நிராகரிக்கப்பட்டது | | |
| | | 2 | ஸ்ரீ முருகா டிரேடர் ஐந்து மூலை ரோடு ஸ்ரீனிவாசா தியேட்டர் அருகில் திருக்கோவிலூர் | 1790/ 23.03.22 | 5000/– | நிராகரிக்கப்பட்டது | | |
| 8 | பொதுசுகாதார மினி லாரி, டிராக்டர், டிரெய்லர் மற்றும் 3 சக்கர வாகனங்கள் பஞ்சர் ஒட்டுதல் மற்றும் பழுது பார்த்தல் | 1 | ஒப்பந்தம் புள்ளிகள் ஏதும்வரப் பெறவில்லை | – | – | நிராகரிக்கப்பட்டது | | |
| | | 2 | ஒப்பந்தம் புள்ளிகள் ஏதும்வரப் பெறவில்லை | – | – | நிராகரிக்கப்பட்டது | | |
| 9 | குடிநீர் விநியோகம் தொடர்பாக பைப்லைன் பழுது பார்க்கும் பணிக்கு வெல்டிங் வைத்தல், மரைபோடுதல் கேட்வால்வு சரிசெய்தல் | 1 | எ.வெங்கடேசன் த/பெ.ஆறுமுகம் சிவா லேத் ஒர்க்ஸ் யூனியன் ஆபீஸ் ரோடு திருக்கோவிலூர் | 1791/ 23.03.22 | 5000/– | குறைவு | | |
| | | 2 | எஸ்.திருமால் த/பெ.சுப்ரமணியன் பாலாஜி லேத் ஒர்க்ஸ் திருக்கோவிலூர் | 1792/ 23.03.22 | 5000/– | கூடுதல் | | |

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 10 | திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் தினசரி சேகரமாகும் மக்கும் மற்றும் மக்கா குப்பைகளை வார்டு வாரியாக தள்ளுவண்டிகளில் வாங்கி உரிய பொது சுகாதார வாகனத்தில் வழங்கி வளம் மீட்பு பூங்காவில் கொண்டு சேர்த்து தரம் பிரிக்கும் பணி செய்து தருதல் (நாள் ஒன்றுக்கு மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர் நபர் ஒன்றுக்கு ஊதியம்) | 1 | ரியல் சார்டிபள் டிரஸ்ட் 297 வது தெரு தாமோதரன் நகர் வியாசர்பாடி சென்னை | 1793/ 23.03.22 | 15000/- | [illegible] |
| | | 2 | எஸ்டீம் பவுண்டேசன் சென்னை | 1794/ 23.03.22 | 15000/- | [illegible] |
| 11 | அவ்வப்போது தேவைப்படும் கணினி உபகரணங்கள் வாங்க | 1 | ராயல் கம்பியூட்டர் மஜித் பிரியாணி மேல் மாடி செவலை ரோடு திருக்கோவிலூர் | 1795/ 23.03.22 | 5000/- | [illegible] |
| | | 2 | ஓமோ சிஸ்டம்ஸ் கிழக்கு தெரு திருக்கோவிலூர் | 1796/ 23.03.22 | 5000/- | [illegible] |

அலுவலக குறிப்பு : - திருக்கோவிலூர் நகராட்சிக்கு 2022–2023 ம் ஆண்டிற்கு தேவை[illegible] பொருள்களை சப்ளை செய்ய கடந்த 23.03.2022 புதன் கிழமை ஒப்பந்தப்புள்ளி கோரப்[illegible] கோரப்பட்டதில் வ.எண் 1 முதல் 4 மற்றும் 7 க்கான இனங்களுக்கு வைப்புத்தொகை [illegible] செலுத்தப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் ஏதும் பெறப்படவில்லை எஞ்சிய இனம் 8 க்கு [illegible] ஒந்தப்புள்ளி கோரப்படவில்லை. மேலும் இனம் எண்.6, 9 10 மற்றும் 11 க்கு மட்டில் மேற்கண்[illegible] வைப்புத்தொகை மற்றும் ஒப்பந்தப்புள்ளி நமூனா வரப்பெற்றுள்ளது. எனவே குறைந்த ஒப்பந்த[illegible] அளித்துள்ள நிறுவனத்தை அங்கீகரத்து பணி ஆணை வழங்க மன்றத்தின் ஒப்புதல் வழங்கலாம்.

(கோப்பு எண். 40/202[illegible])